**(தை 11) 2023 ஜனவரி 25-ம் தேதி புதன்கிழமை**
**மாலை 4.30 மணிக்கு**
**திருவாரூர் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெறும் அப்பொழுது**
**கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**
**முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா, நகரமன்ற தலைவர்**

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள்:1<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 10.01.2023 ம் தேதிய செயல்முறை ஆணை ந.க.எண். 35295/2022/EA2 - SWM-9 உத்தரவில், திருவாரூர் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான பணியாளர்கள், தளவாடச்சாமான்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கி இதனை இந்நகராட்சியால் குறிப்பிடப்படும் உரமாக்க மையம் (MCC) மறு சுழற்சி மையம் (RRC) மற்றும் கழிவு வளம் மீட்பு மையம் (MRF) ஆகிய இடங்களுக்கு கொண்டு வர ஒரு டன்னிற்கு ரூ.4562.55 என நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின் படி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.<br>இப்பணியினை மேற்கொள்ள திருவாரூர் நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.416.97 இலட்சம் செலவாகும் என்பதினால் இத்தொகையை பொது நிதி மற்றும் 15 வது மத்திய நிதிக்குழு (15th CFC) , SBM Tied grant - ஆகியவற்றிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதன் பொருட்டு ஏற்படும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 2592 /2022/எச்1 | 214) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

(ஒம்) செ.புவனப்பிரியா
நகரமன்ற தலைவர்,
திருவாரூர்

நாள் : 25.01.2023
இடம் : திருவாரூர்